




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) முகாம் அலுவலகத்திலிருந்து, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில், கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை, கலைஞர் நூலகம், மண்டல இளைஞர் அணி அலுவலகம் ஆகியவற்றை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ. பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இல. பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, ப. அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ். சீனிவாசன், சி.ஆனந்தகுமார், ஜி.பி. ராஜா, கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில், மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்டோபர் திலக் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

### மாநிலங்களவைக்கு

# திருச்சி சிவா - கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் தேர்வு!

## கிறிஸ்டோபர் திலக் — எல்.கே.சுதீஷும் தேர்வாகினர்!









**சென்னை, மார்ச் 11-மாநிலங்களவை எம்.பி., பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்திருந்த, தி.மு.க.வைச் சேர்ந்த திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக், தே.மு.தி.க., பொருளாளர் எல்.கே.சுதீஷ், உள்ளிட்ட ஆறு பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.**

தமிழகத்தைச் சேர்ந்த ஆறு ராஜ்யசபா எம்.பி.,க்களின் பதவிக்காலம் முடிவதால், மார்ச் 16ல் தேர்தல் நடக்கும் என தேர்தல் கமிஷன் அறிவித்தது.

தேர்தல் நடத்தும் அதிகாரியாக தமிழக சட்ட சபை கூடுதல் செயலர் சாந்தி நியமிக்கப்பட்டார். ராஜ்யசபா எம்.பி., பதவிக்கு மொத்தம் 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த 6ம் தேதி நடந்த வேட்புமனு பரிசீலனையின்போது, 12 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. வேட்பு மனுவை வாபஸ் பெற நேற்று முன்தினம் 9 ஆம் தேதி கடைசி நாள். இதையடுத்து, ஆறு காலியிடங்களுக்கு, ஆறு பேரின் வேட்பு மனுக்கள். தாக்கல் செய்யப்பட் டிருந்ததால், போட்டியின்றி அவர்கள் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர்.

தேர்தல் நடத்தும் அதிகாரி சாந்தி அளித்த பேட்டி வருமாறு:

ராஜ்யசபா எம்.பி., பதவிக்கான தேர்தலில், 18 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில், தி.மு.க.வின் திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரசின் கிறிஸ்டோபர் திலக், தே.மு.தி.க.வின் சுதீஷ் உள்ளிட்ட ஆறு பேரின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

ஆறு காலியிடங்களின் எண்ணிக்கையும், சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கையும் சமமாக உள்ளன. எனவே, அவர்கள் ஆறு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை, அவரது இல்லத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


